**செ.வெ.எண்: 133** **நாள்: 01.03.2021**

**கரந்தை கோடியம்மன் கோவில் பகுதி, பட்டுக்கோட்டை புறவழிச் சாலை பகுதியில் நிலையான கண்காணிப்புக்குழு வாகன சோதனையினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.**

தஞ்சாவூர் கும்பகோணம் சாலை கரந்தை கோடியம்மன் கோவில் பகுதி, பட்டுக்கோட்டை புறவழிச்சாலையில் நிலையான கண்காணிப்புக்குழு வாகன சோதனையின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள இன்று (01.03.2021) ஆய்வு செய்தார்.

**நிலையான கண்காணிப்புக்குழு வாகன சோதனையின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி தஞ்சாவூர், திருவையாறு, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், பேராவூரணி, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை ஆகிய சட்டமன்றத் தொகுதி தேர்தல் நன்னடத்தை விதிகளை கடைப்பிடிப்பதை கண்காணிக்கும் வகையில் 24 பறக்கும் படை, 24 நிலையான கண்காணிப்புக்குழு வீடியோ கண்காணிப்புக்குழு. அமைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வேட்புமனு தாக்கல் நெருங்கி வருவதையொட்டியும்,தேர்தல் விதிமுறைகளை முழுமையாக கடைபிடிக்கும் வகையில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு அதிக அளவு கவனமெடுத்து பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இக்காலகட்டத்தில் பறக்கும் படை அலுவலர்கள் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும், நிலையான கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு அறிவுறுத்தப்பட்ட பகுதிகளில் ஆம்னி பேருந்து, மணல் லாரிகள், பயணிகள் பேருந்து, கார், இருசக்கர வாகனங்கள் என அனைத்து வாகனங்களையும் தீவிரமாக தணிக்கை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் தங்களின் வாகன தணிக்கையின் போது சரியான ஆவணங்கள் எதுவும் இன்றி நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் எடுத்துச் செல்லப்படும் பணம் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் குறித்து விசாரணை செய்து அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிக்கையாக பெறப்பட்டு அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் தொடர்பான புகார்களுக்கு மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு 1950 இலவச எண்ணிற்கு உடனுக்குடன் தகவல் அளிக்கலாம்.தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட புகார்கள் தொடர்பாக உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள் அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**